
# செல்வியின் வீட்டில் கொரோனா

கோவிட்-19: இந்திய விஞ்ஞானிகளின் பதில்
ஒரு தன்னார்வக் குழு

IndiSciCovid

https://indscicov.in/



Indian Scientists' Response to COVID-19

செல்விக்கு ஒரே கவலை. மாமனாருக்கு நேற்றிலிருந்து காய்ச்சல், கடும் இருமல், கேட்கவே வலித்தது.

சுமதி ஒழுங்காக நேரத்திற்கு எவ்வளவு ஜுரம் என்று தெர்மோமீட்டர் கொண்டு கண்காணித்துக்கொண்டு இருந்தாள் . தன் பெண் இப்படி அறிவியல் பாணியில் செயல்படுவதில் செல்விக்கு பெருமை. தெர்மோமீட்டர் வாங்கியது சமீபத்தில்தான். மாணிக்கம் என்னவோ இதெல்லாம் வீண் செலவு என்று பேசிக் கொண்டிருந்தார். நெற்றியில் கை வைத்து நாடி பிடித்து பார்த்தால் போதாதா என்ன? சுமதி விடவில்லை: “இந்த மாதிரி நேரத்தில் டாக்டரிடம் பேசும்போது ஜுரம் என்று மட்டும் சொல்லாமல் எப்போது எவ்வளவு உடல்வெப்பம் என்று சரியாக தெரிவிக்க வேண்டும்” என்றாள் . தம்பி கணேஷ், “ஆமாம் இவ பெரிய இது, தெனமும் டாக்டர் கிட்ட பேசுவ” என்று கிண்டலடித்ததை பொருட்படுத்தவில்லை. செல்விக்கு தன் 16 வயது பெண் பொறுப்பாக நடந்து கொள்வதில் மகிழ்ச்சி.

கேள்விப்பட்டது எல்லாம் வைத்து பார்த்தால் மாமனாருக்கு அந்த கொரோனா காய்ச்சல்தான் வந்திருக்க வேண்டும் என்று செல்விக்கு உணர்ந்து விட்டது. ஊர் முழுக்க இதே பேச்சு. அவர்கள் வாழ்க்கையே ஸ்தம்பித்து நிற்கிறது. செல்வி சில வீடுகளில் வேலை செய்கிறார், மாணிக்கம் ஒரு துணி




கடையில் தையலாளர். அவர்கள் நால்வரோடு மாணிக்கத்தின் வயதான பெற்றோர் வேறு. சமாளிப்பதே கடினமாகத்தான் இருந்தது. கூடுபோல சிறிய வீடு. நீளமாய் குறுகிய வடிவத்தில், தெருப்புறம் ஒரு தீப்பெட்டி போல ஒரு சின்ன அறை , அடுத்து வீட்டின் ஒரே பெரிய அறை , கரிசலாய் சமையலறை, பின்னர் குளிக்கும் இடம் தாண்டி கழிவறை. பிற்புறம் பக்கிங்காம் கால்வாய். அதில் நீர் பெருக்கெடுத்து ஓடி யாரும் பார்த்ததில்லை. சேரும் சகதியுமாய் கொசுக்களை உற்பத்தி செய்கிறது. செல்விக்கு இதெல்லாம் பொருட்டில்லை, தன் வீட்டிலாவது தனி கழிவறை இருக்கிறது, செல்வியின் த ம்பியின் இன்னும் மூன்று குடும்பங்களுடன் ஒரே கழிவறையை பயன்படுத்துகிறது.

இப்போது வருவாயில்லை , இருக்கும் கொஞ்சநஞ்ச சேமிப்பும் சிறிதுசிறிதாய் நலிந்து கொண்டிருக்கிறது.

ஆறு வாய்க்கு சோறு போட வேண்டும். கொரோனா காய்ச்சலுக்கு மருந்து எத்தனை செலவாகுமோ. ஒருவேளை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டினால்? அரசு மருத்துவமனையில் சிகிச்சை இலவசம்தான், ஆனால் அங்கே அடிக்கடி செல்பவர்களுக்குத்தானே தெரியும், ஒவ்வொரு முறையும் எத்தனை செலவென்று.


மருத்துவமனைக்கு போவதே எப்படி? ஆம்புலன்ஸ் வரும், கூட்டிப் போகும் என்கிறார்கள், நம்மைப் போன்றவர்களுக்காக அந்த வேண்டியெல்லாம் வீடுதேடி வருமா என்ன? செல்வி வேலை செய்யும் வீடு ஒன்றில் வயதான ஒரு பெண் உடம்பு



சரியில்லாமல் இருக்கிறார், அவருக்கு எதாவது என்றால் நிச்சயம் ஆம்புலன்ஸ் வரும்.

அப்படியே மருத்துவ ஊர்தி வந்து மாமனாரை கூட்டிப் போனாலும் செல்வி அங்கே மூன்று வேளை சாப்பாடு எடுத்து போக வேண்டுமே, பஸ் வசதியில்லாமல் எப்படி போக முடியும் ? அரசு சரியாக மாமனாருக்கு சாப்பாடு போடுமா ? இதுவரை பார்த்ததில் செல்விக்கு முழு நம்பிக்கையில்லை. நல்ல வேளை , பிரச்சினை மாமியாருக்கு இல்லை, அந்த கான்டீன் சாப்பாடு எல்லாம் அவருக்கு ஒத்தே வராது.

சரி, கவலைப்பட்டு ஏதும் பயனில்லை என்று வேலையைப் பார்க்க துவங்கினார் செல்வி. காய்ச்சலும் இருமலும் நமக்கு என்றும் பழக்கமான தோழர்கள். வருடத்திற்கு பலமுறை வருவது உண்டு. இப்போது வந்திருப்பது கொரோனாவா? உடல் வெப்பம் 100க்கு மேலே உள்ளது. தான் எப்போதும் கைவசம் எண் வைத்திருக்கும் டாக்டர் சுந்தரிடம் தொடர்பு கொண்டார் செல்வி. கேள்வியெல்லாம் கேட்டபிறகு, “கொரோனா சோதனை செய்தாக வேண்டும், ஆனால் இப்போது மருத்துவமனை எல்லாம் சமாளிக்க முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டு இருக்கினறன, மாமனாருக்கு அவசரம் இல்லை, இன்னும் ஒரு நாள் பொறுத்து பார்க்கலாம்” என்கிறார் டாக்டர். உடனடியாக செய்ய வேண்டியது என்ன? பெரியவருக்கு யாரிடமிருந்து நோய் தொற்றியது என்று பார்க்க வேண்டும், உடனடியாக வீட்டிலேயே அவரை தனிமைப்படுத்தியாக வேண்டும்.



அது என்ன தனிமை? முதலில் செல்விக்கு விளங்கவில்லை, நிதானமாய் கேட்டு தெரிந்து கொண்டு இப்போது நன்கு தெரிந்து விட்டது. சுமதியுடன் பேசி, இருவரும் சேர்ந்து ஒரு “செய்ய வேண்டியது” என்ற நடவடிக்கை குறிப்பு தயார் செய்தனர். இவற்றை அமல்படுத்துவதற்கு தன் மாமியாரையும் சேர்த்துக் கொண்டார் செல்வி. எல்லாம் புரிந்தது என்று சொல்ல முடியாவிடிலும் , தோற்றுநோய் என்று கிழவிக்கு புரிந்து விட்டது. அவர் இளவயதில் சிற்றம்மை பெரியம்மை என்று நிறைய அனுபவமுண்டு.

பெரியவரைப் பார்த்துக் கொள்வதற்கு ஒருவர் வேண்டும், அது மாணிக்கத்தின் வேலை என்று முடிவு செய்யப்பட்டது. ஒருவர் மட்டுமே பெரியவருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்க வேண்டும் என்று டாக்டர் வலியுறுத்தி உள்ளார். சுமதிக்கு தலைமுடி பின்னி விடுவதிலிருந்து, மாமியாரைப் பேணிப்பது, சமையல் என்று ஆயிரம் வேலை செல்விக்கு. மாமனார் பராமரிப்பு என்று இறங்கினால் வேறுஏதும் செய்ய முடியாது. தன் தந்தைக்கு தேவையானதை மாணிக்கம் செய்வது சரிதான். மாமனார், மாணிக்கம் இருவருமே முணுமுணுத்தாலும் செல்வி பொருட்படுத்தவில்லை. சுமதி உதவ, செல்வி இயக்க, குடும்பமே பணியில் இறங்கியது.

1. பெரியவர் முன்னறைக்கு மாற்றப் பட்டார். மாணிக்கமும் கணேஷும் பயன்படுத்தும் அறை அது, ஆனால் இப்போது வேறு வழியில்லை. சோப்பு கரைத்த ஒரு குடம் தண்ணீர் அங்கு வைக்கப்பட்டுள்ளது. அதை வைத்து அவ்வப்போது அறையிலுள்ள எல்லா பரப்பையும் சுத்தம் செய்யவேண்டும். இது மாணிக்கம் செய்ய வேண்டிய பணி . கதவு ஜன்னல் எதுவானாலும் பெரியவர் முழங்கை கொண்டுதான் திறக்கவேண்டும். அவர் தொடும் ஒவ்வொரு இடத்தையும் சோப்பு நீர் கொண்டு மாணிக்கம் சுத்தம் செய்ய வேண்டும்.

2. பெரியவர் அறைக்குளேதான் இருக்கவேண்டும். கழிவறை



பயன்படுத்த வெளியில் வந்தால் போதும். அப்படி வரும்போதும் வீட்டில் உள்ள மற்றவர் மூன்றடி தூரம் தள்ளி இருக்கவேண்டும். அவர் போகும் வழி, மற்றவர் இருக்கும் வட்டம் என்றெல்லாம் தரையில் சாக்பீஸ் கொண்டு வரைந்துள்ளான் கணேஷ். நாளை காலை வீடு துலக்கும்போது அழிந்து விடும், ஆனாலும் பரவாயில்லை, இன்று முழுதும் அவர்களுக்கு பழக்கம் ஆகும். இதுவரை சுமதி செய்த, உடல்வெப்பம் குறிக்கும் வேலையும் இனி மாணிக்கம் கையில் வந்து விட்டது.


3. மாணிக்கமும் பெரியவரும் ஒரு தர்மசங்கடமான உரையாடல் நிகழ்த்துகின்றனர்: பெரியவர் கழிவறை பயன்படுத்தும்போது என்னவெல்லாம் நினைவில் கொள்ள வேண்டும் என்று. கழிவுக்கும் முன்னும் பின்னும் இரண்டு முறை சோப்பு கொண்டு இரு கைகளையும் கழுவ வேண்டும் என்று பெரியவருக்கு புரிய வைப்பது கொஞ்சம் கடினம்தான். அதோடு கழிவறையில் எந்த இடமில்லாம் தொடுவார் என்று நிர்ணயித்தனர். அதை எல்லாம் கழுவியாக வேண்டும். அவர் வெளியே வந்தவுடன் மாணிக்கம் உள்ளே சென்று எல்லாம் மறுபடி சுத்தம் செய்தாக வேண்டும்.

4. அவருக்கு சாப்பாடு கொண்டு வருவதும் மாணிக்கம்தான். உணவுக்குப் பின், பிற்புறம் சென்று கை கழுவும் பெரியவர் அங்கு செல்வி வைத்துள்ள சோப்பு நீர் கொண்ட பாத்திரத்தில் தட்டு டம்ளர் எல்லாம் போட்டு விடவேண்டும். வேறு எந்த தட்டோ ஸ்பூனோ பெரியவர் தொட்டிருந்தால் அதை அங்கு போட வேண்டியது மாணிக்கத்தின் பணி .

5. வீட்டுக்குள் வர வெளியாட்கள் யாருக்கும் அனுமதியில்லை. இன்று பக்கத்துவீட்டு காவேரி வந்தபோது செல்விதான் வெளியே சென்று பேசினார்.

குடும்பத்தில் எல்லோருக்கும் பொறுப்புகள் தரப்பட்டன. வீட்டில் பிற இடங்களிலும் நிறைய வேலை உள்ளது:

1. சமையலறை வெளியே சோப்புநீர் கொண்ட இன்னொரு குடம்



அதற்கான துணியுடன் வைக்கப்பட்டுள்ளது. அதைக் கொண்டு வீட்டிலுள்ள மேஜை போன்ற எல்லா மேற்பரப்புகளையும் அவ்வப்போது துடைப்பது கணேஷ் செய்யும் பணி . (மின் விளக்கு போடும் ஸ்விட்ச்சு எல்லாம் கூட.)

2. நாளுக்கு இருமுறை வாளியில் வெளுப்புக் காரமும் டெட்டாலும் கலந்த நீர் கொண்டு வீடு முழுதும் துடைக்கிறாள் சுமதி.

3. அவர்கள் குடும்பத்தில் என்றுமே தனித்தனி துண்டுகள்தான் பயன்படுத்துகின்றனர். இப்போது பெரியவரின் துணிகளை தனியாக சலவை செய்கிறார் செல்வி.

4. வீட்டிலேயே மும்மபடிப்பு செய்து சுமதி உருவாக்கிய முகமூடிகளை , பெரியவர் அருகே செல்லும்போது அவரும் மற்றவரும் பயன்படுத்துகின்றனர்.

செல்வியிடம் நீண்டதொரு பெருமூச்சு வெளிப்படுகிறது. கொரோனா காய்ச்சலை எதிர்கொள்ள தயாரிப்பாகத்தான் இருக்கிறன்றனர். மாணிக்கம், செல்வி, இருவருக்கும் வருமானமும் கிடைத்தால், பிரச்சினையை நன்றாகவே சமாளித்து விடலாம்.

இக்கதைகள் வழக்கமான காட்சிகளை சித்திரிக்கின்றன , இங்குள்ள தகவல்களை சூழலில் பொருந்துகின்றன. இவ்வாறு செய்யும் போது எளிமைப்படுதலை தவிர்க்க இயலாது. எங்கள் இணையத்தளத்திலுள்ள பிற அறிவியல் தகவல்களோடு சேர்த்து கருதவும்.

